# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.13/2013

2025 -ம் ஆண்டு ஜுன் மாதம் 27 -ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.3 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr-III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 27.06.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முருகராஜன் (PW) | வயது | : | 60/2025 |
| க/த பெயர் | : | திரு. ரங்கராஜன் | தொழில் | : | சுயதொழில் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை தொடர்ச்சி**

19.05.2006 தேதியிட்ட சாட்சியானவர் தனது சொத்தை சிட்டி யூனியன் வங்கியில் அடமானம் வைத்ததற்கான கடன் பத்திரம் அசல், 03.07.2008 தேதியிட்ட மேற்படி கடன் வரவு அசல் ஆவணம், சொத்து வரி ரசீதுகள் ஆகிய ஆவணங்களை குறியீடு செய்ய வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வழக்கு சொத்துடன் தொடர்பு இல்லாததால் குறியீடு செய்ய இயலாது என ஆட்சேபணை செய்ததை நீதிமன்றம் பரிசீலணை செய்ததை சாட்சியானவர் தனது சொத்தை அடமானம் செய்ததற்கான அசல் ஆவணம் என்பதும், இதர ஆவணங்கள் வழக்குடன் தொடர்புடையது என்பதும் இந்த வழக்கில் பிரதிவாதியானவர் தனது உடன் பிறந்த சகோதரர் என்பதால் வழக்கு சொத்துடன் தொடர்பு உள்ள விபரத்ததை வழக்கு தீர்ப்பின்போது தீர்மானித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்ய நீதிமன்றம் அனுமதி அளித்தது.

| வ. எண். | தேதி | ஆவணங்கள் | குறியீடு விவரம் |
|---|---|---|---|
| 1 | 19.05.2006 | தேதியிட்ட சாட்சியானவர் தனது சொத்தை சிட்டி யூனியன் வங்கியில் அடமானம் வைத்ததற்கான கடன் பத்திரம் அசல் **(வாதி தரப்பு ஆட்சேபணையுடன்)** | பி.சா.ஆ.7 |
| 2 | 03.07.2008 | தேதியிட்ட மேற்படி கடன் வரவு அசல் ஆவணம்**(வாதி தரப்பு ஆட்சேபணையுடன்)** | பி.சா.ஆ.8 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 02.06.2023 | சொத்து வரி ரசீதுகள் **(வாதி தரப்பு ஆட்சேபணையுடன்)** | பி.சா.ஆ.9 |
| 4 | 04.10.2023 | வழக்கு சொத்திற்கு மின் வாரியத்திற்கு செலுத்திய மின் கட்டண ரசீது **(வாதி தரப்பு ஆட்சேபணையுடன்)** | பி.சா.ஆ.10 |

எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ளவாறு உத்தரவு பிறப்பிக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.30 16:28:26 +0530

District Munsif

Mannargudi.